முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1368

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.06.2023, புதன்கிழமை

1. தானதர்மத்தின் மகா சக்தியே
   தவபலம் கொண்டு உலகை மாற்ற
   ஞானவானாக உலக மக்களையெல்லாம் படைக்க
   ஞானியாக வந்த அரங்கனே
2. அரங்கனே எந்தன் அவதாரமே
   ஆகிலமதில் உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் அரங்கன் நீ பலம் பெற
   ஆறுமுகன் யான் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 13 ம் நாள், 28.06.2023, புதன்கிழமை)
3. ஆசிதனை அரங்கன் பலம்
   உலகில் இன்னும் ஆற்றலாக
   அன்பர்கள் வழிச் சென்று உலகமெங்கும்
   அற்புதத்தை நடத்த ஆறுமுகன் உரைப்பேன்
4. உரைக்கவே கலியுகம் உன் கரம்படவே
   கருணைமிக்க ஞான யுகமாக மாறும்
   அழியாமை பெற்ற உயர் மக்களாக
   அன்பர்களெல்லாம் உன்னால் ஆற்றல்பெறுவர்
5. அழிவில்லா இயற்கை பேரிடர் ஆபத்து ஏதுமில்லா
   அற்புதமான ஞான உலகமாக அகிலம் அரங்கன் தயவாலே மாறும்
   ஆற்றல்மிக்க தொண்டர்களும் ஆளுமையாளர்களும் பெருகி
   அகிலமே ஞானஆட்சிபெறும்
6. அற்புதத்தை அரங்கனைக்கொண்டு ஆறுமுகன் யான் நடத்துவேன்
   அன்னதனால் உலகோர் அரங்கன் குடில் நோக்கி வந்து
   ஆபத்தில்லா ஞான வாழ்வு அமைதி பாதுகாப்பு நிறைந்த
   உயர்வாழ்வு அகிலமதில் கண்டு சிறக்க

7. அரங்கன் திருவடி பற்றி சரணாகதி கொண்டு இனிதே
அவரவர் சன்மார்க்க நெறியாம் அரங்கன் தர்ம நெறியை ஏற்றுவர
தரணியில் அற்புதம் சடுதி நிகழும்
தவராஜனால் ஞான ஆட்சியும் மலரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–